
குக்கூ
மீரா

# குக்கூ

மீரா

அகரம்

மனை எண்: 1, நிர்மலா நகர்,

தஞ்சாவூர் - 613007.

குக்கூ / மீரா / © ஆர்.சுசீலா / முதற் பதிப்பு: ஜூன் 2001 / இரண்டாம் பதிப்பு: ஜூலை 2006 / வெளியீடு: அகரம், மனை எண்:1, நிர்மலா நகர், தஞ்சாவூர்-7 / அச்சாக்கம்: மீரா ஃபைன் ஆர்ட்ஸ், சிவகாசி / விலை: ரூ.35/-


## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Kukkuu |
| Subject | : | Poems |
| Author | : | Meera |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition June. 2001<br>Second Edition July 2006 |
| Size of the Book | : | Crown 1x8 |
| Printing Point | : | 11 Pt. |
| Paper | : | 11.6 SPB Book Print |
| Number of Pages | : | 88 |
| Number of Copies | : | 1100 + 100 |
| Printers | : | Meera Fine Arts. Sivakasi |
| Publishers | : | **AKARAM**<br>Plot No: 1, Nirmala Nagar<br>Thanjavur - 613 007 |
| Price | : | **Rs. 35/-** |

# குயில் மீண்டும் கூவுகிறது

அணிந்துரை

கவிக்கோ அப்துல் ரகுமான்

ஒரு பனிக் கால மௌனத்திற்குப் பிறகு மீரா மீண்டும் குயிலாகிக் 'குக்கூ' என்று கூவியிருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.

மீராவின் கவிதைகளைத் தமிழ்நாட்டுக் கால வுணர்வைக் காட்டும் மானிகள் என்றே கூறலாம்.

அவருடைய தொடக்கக் காலக் கவிதைகள், அப்போது கிளர்ந்தெழுந்த தமிழின உணர்வுகளைப் பிரதிபலித்தன.

அப்போது அவர் எழுதிய,

தெருவோரச் சாக்கடையில்
வருமா தெப்பம்?

என்ற வரி அறிஞர் அண்ணாவால் 'திராவிட நாடு' ஏட்டில் மேற்கோளாகக் காட்டப்பட்டு பாராட்டப்பட்டது.

பின்னர் அவர் எழுதிய கவிதைகள், அக்காலத் தமிழ்க் கவிஞர்களின் சமூக உணர்வையும், பொதுவுடைமை நாட்டத்தையும் புலப்படுத்தி நிற்கின்றன.

ஆனால் மீராவுக்கென்று ஒரு தனித்தன்மை உண்டு. அதனாலேயே இந்த வெள்ளங்களில் கரைந்து போகாமல் அவர் கரையேறிவிடுகிறார்.

திராவிட இயக்கங்கள் நாற்காலியில் அமர்ந்து காலிழந்து போன போது அவர் அந்த இயக்க ஈடுபாட்டி லிருந்து விலகிப் பொதுவுடைமையின் பக்கம் போய்விட்டார்.

பொதுவுடைமைக் குழுவில் இருந்தபோதும் அக்குழுவின் திறனாய்வாளர்கள் இலக்கியவாதிகளுக்குச் செய்து கொடுத்த இரும்புச் சட்டையை அணிந்துகொள்ள அவர் தயாராய் இல்லை.

காதலைப் பாடுவது உலக மகாக் குற்றம், மன்னிக்க முடியாத சமூகத் துரோகம் என்று 'முற்போக்கு'த் திறனாய்வாளர்கள் சர்வாதிகாரச் சட்டங்களை இயற்றிக் கொண்டிருந்தபோது அவர், துணிந்து, 'கனவுகள்+ கற்பனைகள்=காகிதங்கள்' என்ற காதல் கவிதைத் தொகுப்பை வெளியிட்டார்.

'முற்போக்குத் திறனாய்வாளர்கள் உங்களைத் தூக்கிலே போடுவார்கள்; வேண்டாம்' என்று அவரை நான் எச்சரித்தேன்.

அதைப் பற்றி அவர் கவலைப்படவில்லை. இது எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

நான் எதிர்பார்த்தது போல் முற்போக்காளரிடமிருந்து மீராவுக்குக் கல்லடி கிடைக்கவில்லை. மாறாகப் பூங்கொத்துக்கள் கிடைத்தன.

இதற்குக் காரணம் மீரா அவர்கள் குழுவைச் சார்ந்தவர் என்பதுதான்.

குழு மனப்பான்மை எந்த அளவுக்கு நேர்மையற்றிருக்கும் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

'கனவுகள்....' ஒரு மரபை உண்டாக்கி (Trend setting), அதைப் பின்பற்றி ஏராளமான வசன கவிதைக் காதல் தொகுதிகள் வெளிவரச் செய்தது என்பது ஒரு வரலாற்றுப் பதிவு.

மீராவின் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு புதிய நவில்முறையைப் (way of expression) பார்க்கலாம்.

'கனவு'....களின் உள்ளடக்கம், உருவம் இரண்டிலிமிருந்து வேறுபட்டிருந்தது, அதன் பின்னால் வந்த 'ஊசிகள்'.

'கனவு'...களின் வசனம் பூவின் மேல் படிந்திருக்கும் பனித்துளியைப் போலிருந்தது.

'ஊசிக'ளின் வசனம் சமுதாய அங்கதம் என்ற அதன் நவில் பொருளுக்கேற்ப, சிறிதாக, கூராக, நஞ்சு தடவப்பட்டிருந்தது.

இப்போது 'குக்கூ'. இதுவும் முந்தைய தொகுதிகளி லிருந்து மாறுபட்டது.

ஹைகூ தமிழில் பிரபலமாகிப் பரவிக் கொண்டிருந்த போது மீரா, 'நானும் ஹைக்கூ எழுதிக் கொண்டிருக்கிறேன். ஆனால் அந்த இலக்கணத்தை அப்படியே பின்பற்றவில்லை. பெயர் கூட 'குக்கூ' என்று வைத்திருக்கிறேன் என்று என்னிடம் கூறி, ஓரிரண்டு கவிதைகளையும் சொன்னார்.

இது நடந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு 'குக்கூ' கூண்டிலிருந்து வெளியே வந்திருக்கிறது.

சிறிய வடிவம், படிமக் காட்சி, பிராணிகளின் செயல்கள் மூலமாக வாழ்வின் விநோதங்களை வெளிப்படுத்துவது, காட்சிகளில் வாழ்க்கைத் தத்துவத்தைத் தரிசித்தல் போன்ற ஹைகூவின் பண்புகள் 'குக்கூ'விலும் இருந்தாலும் வேறுபாடுகளும் உண்டு.

மூன்று வரி என்ற அடியளவை மீரா எடுத்துக் கொள்ளவில்லை. 'குக்கூ'வின் வரிகள் நவில் பொருளுக் கேற்பக் கூடுதலாகவோ, குறைவாகவோ அமைந்திருக் கின்றன.

மீராவின் மரபுத் தோய்வு 'குக்கூ'வில் அவரை இயைபுத் தொடையைக் கையாளச் செய்திருக்கிறது.

இந்த இயைபுத் தொடை சில இடங்களில் இயற்கையாய் அழகாய் அமைந்திருந்தாலும், பல இடங்களில் செயற்கையாகப்படுகிறது.

ஹைகூவில் புழு, பூச்சி, பறவை, விலங்குகளின் செயல்களைக் கூர்மையாகக் கவனித்து, அவற்றைச்

*சித்திரிப்பதன் மூலமே வாழ்வின் விசித்திரத்தைக் கூறிவிடும் பண்பு உண்டு.*

*இஸ்ஸா போன்ற கவிஞர்கள் இதில் வல்லவர்கள்.*

*மீராவுக்கும் இத்தகைய பார்வை வாய்த்திருக்கிறது.*

கோழியும் சேவலும்
குப்பையைக் கிளறும்
விடியற் காலையில்
கண் மூடிக் கிடக்கும்
ஊர்நாய் ஒரு மூலையில்
இரவெல்லாம் குரைத்த அசதியில்

*என்ற கவிதையில் இதைப் பார்க்கலாம்.*

*இதைப் போன்றே அடுத்த வீட்டில் பால் குடித்து விட்டுத் தன் வீட்டு மாடியில் வந்து படுக்கும் பூனை (21), தன் கல்லறையைச் சுற்றி வரும் வளர்ப்பு நாய் (47), செம்மறி முதுகில் சவாரி செய்யும் சுகத்தை அனுபவிக்கும் கரிச்சான் குருவி (53) ஆகியவற்றைச் சித்திரிக்கும் போதும் 'குக்கூ'வில் ஹைகூவின் மணம் வீசுகிறது.*

இதுதான் வேலை
மல்லாந்து படுத்து
இதுதான் வேலை
மல்லாந்து படுத்து
சிகரெட் புகையை
புதிய சிமெண்ட் ஆலை

*என்ற கவிதையில் ஹைகூவுக்கே உரிய படிமக் காட்சி அமைந்திருக்கிறது. ஆனால் ஹைகூவில் இல்லாத 'நவீனத்துவம்' இந்தப் படிமத்தில் இருக்கிறது.*

திசையெங்கும்
இருள் திரைகள்....
வைகறை வந்தது;
கம்பீரமாய்க்
கண் விழித்துப் பாய்கின்றன
கதிர்க் குதிரைகள்

என்ற படிமம் அழகாக இருப்பதோடு, சூரியத் தேரை இழுக்கும் ஏழு குதிரைகளின் தொன்மத்தை மீண்டும் பயன் பாட்டுக்குக் கொண்டு வந்துவிடுகிறது.

கும்பிட்டுப் போனான்
குமரன் தீமூட்டி;
மல்லிசேரி பீடியை
எடுத்துப் பற்றவைத்தான்
மயானத் தோட்டி
எரியும் அப்பா பிணத்தில்

என்ற கவிதையில் மனிதர்களின் குரூரம் மனம் துணுக்குறும்படிச் சொல்லப்பட்டிருக்கிறது.

நகைச் சுவையோடு எள்ளுவது மீராவுக்குக் கைவந்த கலை.

பழமை புதுமை
இரண்டுக்கும் நாங்கள் பாலம்
எலி வாகனம்
ஹெலிகாப்டர் வாகனம்.
இரண்டையும் கொண்டாடும்
எங்கள் காலம்.

என்ற கவிதையில் இதைக் காணலாம்.

○

'குக்கூ'வின் தனித்தன்மை ஹைகூவைத் தமிழ்ப் படுத்தியிருப்பது.

'கனவுகள்....'போலவே இதுவும் ஒரு மரபைத் தொடங்கி வைக்கலாம்.

வால்மீகி நகர்
சென்னை.

அப்துல் ரகுமான்.

# தமிழ்க் காற்றில் மீரா தீட்டிய புதுவர்ணம்

## குக்கூ

---

*மதிப்புரை*

*கவிஞர் பாலா*

---

சாகாத வானம்நாம்; வாழ்வைப் பாடும்
சங்கீதப் பறவை நாம்; பெருமை வற்றிப்
போகாத நெடுங்கடல்நாம்; நிமிர்ந்து நிற்கும்
பொதியம்நாம்; இமயம்நாம்; காலத் தீயில்
வேகாத - பொசுங்காத - தத்து வம்நாம்;
வெங்கதிர் நாம்; திங்கள்நாம்; அறிவை மாய்க்கும்
ஆகாத பழமையினை அகற்றிப் பாயும்
அழியாத காவிரிநாம்; கங்கை யும்நாம்!

*என்ற எழுச்சி முழக்கம் கவிஞர் மீராவின் முதல் முகவரிச்சீட்டு. மேடைதோறும் தமிழ் முழக்கம் செய்த கவிதை மனச் சான்றோர்களின் நெஞ்சில் நிலைத்து கேட்போர் மனதில் தைத்த கவிதை அது. தமிழ்க் கவிதைக்கு நிகழ்கால வரலாற்றுப் பெருமையினை வரைந்து தந்த மீராவின் கவிதை நூல்கள் ஒவ்வொன்றும் ஒரு முகவரிச்சீட்டுதாம்; கவிஞர் தம் முகவரி மட்டுமல்ல, தமிழ்க் கவிதையின் முகவரியும் கூட.*

*1965 ல் வெளிவந்த ''இராசேந்திரன் கவிதைகள்'' புதுப்பார்வை கொண்ட ஒரு மரபுக் கவிஞரைச் சிம்மாசனம் ஏற்றியது. பாரதிதாசனின் அணி வரிசையில் இருந்து*

தனித்தொரு கவிவரிசை விரிவதை அடையாளம் காட்டியது. 1971 ல் வெளிவந்த 'கனவுகள் கற்பனைகள் காகிதங்கள்' காதல் இளைஞர்கள் எல்லோரையும் கவிஞர்களாக மாற்றிய விசித்திரத்தைத் தமிழ்நாடு காணத் தந்தது. 1975 ல் வெளிவந்த *ஊசிகள்* கனவுச் சிறகுகளைக் கட்டி வைத்துவிட்டு சமுதாய நோய் முதல் நாடும் விமர்சன ஊசிகளாய் எங்கும் இறங்கின. கேலிப் பேச்சால் நகை நய வீச்சாய் ஊசிகள் தமிழ்ப் புதுக் கவிதைக்கு புது முகம் வரைந்து தந்தன. ''என்னைப் பொறுத்தவரை இலக்கிய உப்பரிகையில் உலாவுவதை விடச் சமுதாய நடை பாதைகளைச் செப்பனிடுவதையே முக்கியமாகக் கருதுகிறேன்'' என்ற கவிஞர் தம் முகவரிச் சீட்டுடன் வெளிவந்த ஊசிகள் புதுக்கவிதையின் அடிப்படை வெளியீட்டு மொழி எள்ளலும் கேலியும், அவை கிளத்தும் நகை நயந்த சமூகவிமர்சனமும்தாம் என்பதை காதல் உணர்வுப் பெருக்கும் சமூக உணர்வுத் திளைப்பும் புதுத் தமிழ்க் கவிதையின் 'புது அகம் புதுப் புறம்' என நேர்ப்பட உரைத்தன, இந்த இரு கவிதைத் தொகுதிகள். தம் தமிழ்ப் பார்வையாலும் சமூகப் பார்வையாலும் ஒரே நேரத்தில் பெருந்தொகையான வாசகர்களின் கவிஞராகவும் எண்ணற்ற இளங்கவிஞர்களின் ஆதர்சமாகவும் திகழ்ந்தவர் மீரா. தான் தடம் பதித்தும் பிறர் தடம் பதிக்க வழித்தடம் நல்கியும் கவிப்பணியாற்றிட அவர்தம் சொல்வலிவும் மனவலிவும் உதவின. நெடிய இடைவெளிக்குப் பின் இதோ கவிஞரின் இன்னொரு முகவரிச்சீட்டு ''குக்கூ''.

20 ஆண்டுகளுக்கு முன்பு இந்திரன் கவிஞரின் தேர்ந்தெடுத்த சில கவிதைகளின் ஆங்கில மொழியாக்க நூலினை வெளியிட்டார். அப்பொழுது அதில் 'குக்கூ' என்ற பெயரில் சில குறும் பாடல்கள் இடம் பெற்றன. விரைவில் தனியொரு தொகுதியாக எல்லா 'குக்கூ' வும் வர்ணமய மாலையாக வரும் என்றார் கவிஞர். ஆனால் என்ன காரணமோ, 'குக்கூ' பாட்டுக் கூடுகளை கவிஞர் வெகு நாட்களாகத் திறக்கவே இல்லை. கூடு திறந்து காற்றுப்பேறு பெற பட்டாம் பூச்சிகள் காத்துக் கிடப்பதைப்

போல இவ்வளவு நாட்கள் கழித்துக் கூடுகள் திறக்கின்றன இப்போது. இதோ உங்கள் கைகளில் குக்கூ சங்கீத மாலை.

ஊர்த்திரைக்குப் படம் வெளிவரும் முன் ஒரு முன்னோட்டக் காட்சி நடப்பது போல இந்த முன்னுரைக் காட்சியில் மீராவின் குக்கூ எனக்குப் பார்க்கக் கிடைத்திருக்கிறது. என்ன சொல்வது இப்போது! சுருக்கமாய் சொல்வதெனில் மீரா மீராதான். மீசையில் செம்மண் படுவதெனில் விழுந்தாலும் மகிழ்ச்சி அவர்க்கு! (அவருடைய என்னுடைய சிவகங்கை மண் செம்மண் - விழுந்தும் எழுந்தும் புகழ் பெற்ற வரலாற்று மண்.) எனவே கவிஞரின் குக்கூக்கள் இதோ செம்மண் மேனி துலங்க எழுந்து வருகின்றன.

இவற்றிற்கு ஜப்பானிய உடையும் இல்லை; நடையும் இல்லை. மூன்று வரிச் சட்டங்களும் இல்லை. படிமம் கட்டாயம் என்ற சட்டகமும் இல்லை. தமிழ்ச் சாயல், தமிழ்ப்பாட்டு, தமிழ்க் காற்று - இவை 'ஹைகூ' என்று கூவுமா என்ன? 'குக்கூ' என்றுதான் கூவும். மீரா மீரா தான்!

நகை நடைகள், சிந்தனை நறுக்குகள், மனப்பதிவுகள், விமர்சனச் சாட்டைகள், மெல்லிய புனைவுகள், விரித்து வைத்த மனித நேய ஆலாபனைகள் - என்று மீராவின் முகவரிகள் குக்கூ களில் சங்கதிகளாய் ஆவர்த்தனங்களாய் 'கலக்குகின்றன'. இதுவரை தமிழ் 'ஹைகூ' கவிதைகள் காணாத (இயற்கைப்) புனைவு அற்ற பொதுமொழி, கிராமத்து அன்னிய வசீகரம், மனிதத்தன்மை பளிச்சிடும் எளிமை போன்ற (மீராவின் வழக்கமான) 'முத்திரை' களில் இந்த குக்கூக்கள் புதுப்பொலிவு பெற்றுத் திகழ்கின்றன.

''கூடல் நகரில்
கூட்டம்
கூட்டம் கூட்டம்
கூட்டம் கூட்டம் கூட்டம்
கூட்டம் பார்க்க''

என்ற வெளியீட்டுக்கு முன்னரே ஏற்கெனவே ''ரிலிஸாகி விட்ட'' முதற் பாட்டு தொட்டு ஒவ்வொரு பாட்டிலும் கவிஞரின் தனிப் பார்வை பளிச்சிடுகிறது.

தமிழர்தம் அரசியல் பண்பாட்டுக் களங்களைத் தொட்டு நிற்கும் சில குக்கூகள்.

கோரப்புயல்
சாய்ந்தன சரிந்தன
கோடி மரங்கள்
தப்பின
சில கொடி மரங்கள்.

என்று இயற்கை அழிவுக்கும் வாழும் துயருக்கும் இசைக்கப்படுகிறது ஒரு குக்கூ.

யாரோ வைத்த நெருப்பில்
ஏழைக் குடிசைகள் எரிந்தன;
வளரும் புகையில்
மாளிகை சில தெரிந்தன.

என்று 'எரிவதில்' புது அர்த்தம் தெரியக் காட்டும் இன்னொரு குக்கூ.

வாழ்வின் நகர் அடையாளங்களில் நலங்கள் காணாமல் போய்க் கொண்டிருப்பதைக் காட்டுகிறது ஒரு 'முக்காலடிக்கல்':

நகர்க்கரம் தீண்டும்
கிராமத்து வயல்களில்
காணோம் செந்நெல்
முளைத்துள்ள தெங்கும்
வெள்ளையடித்த
முக்காலடிக்கல்.

மீராவின் கவிதைகளுக்கு எப்போதும் வசீகரம் தருவது அவரின் புது நோக்குதான். வாழ்வின் ஒவ்வொரு சிறு

நிகழ்வுகளிலும் உள்ள எதிர்வுகள், மறுபொருள்கள், ஆகியவை நகைபட நயம்பட உரைப்பது அவர் பாணி. இதற்குக் 'குக்கூ'களில் ஏகப்பட்ட இடம் வாய்த் திருக்கிறது.

இலக்கியக் கூட்டத்தில் முன் வரிசையில் உட்கார்ந் திருக்கும் 'காது கேட்காத மாது' பற்றி, 'குவியல் குவியலாய் அழுகல் மாம்பழம் விற்கும் கிழம்' பற்றி, 'தெருக் கல்லை எடுத்தாலே 'ஐயோ சாமி' என்று விண்ணப்பிக்கும் ஆசாமி பற்றி, நகரப் பேருந்தில் கறிவேப்பிலை மணம் பரப்பும் 'கறிகாய் கண்ணம்மா' பற்றி, தாத்தா காந்திதான் சுதந்திரம் வாங்கித் தந்தார் என்று 'தள்ளாடும் குடி மகன்' பற்றி, பிணமாய் நடித்த படத்தை இல்லத்தில் மாட்டி வைத்த நடிகர் பற்றி, மாலை கட்டி வாழும் மயில்சாமி ஒரு நாள் மாலை சூட்டும் மயில்சாமியாக வருவது பற்றி எழுதப் பெற்றுள்ள சித்திரங்கள் எல்லாம் கவிதைகளாகி விட்ட சின்னஞ் சிறு கதைகள் எனலாம். ஒவ்வொன்றிலும் தெரிகிறது நம் காலத்து மனிதர்களின் வாழ்க்கை. நம் வாழ்க்கை வண்ணம் பெற்றுவிட்ட இக்கவிதைகளை 'ஹைகூ' என்பதைவிட 'குக்கூ' என்றுதானே கூற வேண்டும்!

நம் வாழ்க்கைத் தடங்கள் எல்லாமே மீராவின் குயில்கள் இளைப்பாறும் இடங்களாகி விடுகின்றன. கவிஞரின் நகையும் பகையும் துலங்கும் பல தடங்கள் இதில் அடக்கம்.

உறவினர் வீட்டுக்<br>
கல்யாணங்களுக்காய்க்<br>
காத்துக் கிடக்கும் பெட்டியில்;<br>
என் மனைவியின்<br>
ஏழெட்டுப் பட்டுச் சேலைகள்<br>
- வெட்டியில்....

என்ற கிண்டலும் சரி

தோளில் ஏறித்
தொற்றிக் கொண்டா
தோகை கன்னம் தொடுவது?
சூ மந்திரக்காளி...
*நான் அந்தக்*
*கிளியாகக் கடவது!*

*என்ற கேலியும் சரி*

தேக்கடிக் கரையில்
துதிக்கையைத்
தூக்கிக் காட்டிக்
குட்டியிடத்தில் சொன்னது
யானை ஒன்று,
'அதோ பார் படகில்
மனிதர்கள்' என்று

*என்ற அபூர்வப் புனைவும் சரி*

காவல் நிலையம் அருகில்
மலர்ந்த பூக்கள்
விற்கும் இந்தப்
பூக்காரிகளின்
முகங்களைச்
செய்தது யார் சருகில்?

*என்ற கோபம் சோகம் கலந்த வேதனைகளும் சரி நகலெடுக்க முடியாத தனி ஆவர்த்தனங்கள். அவை 'தாகூர் சாகித்யம்' போல் மீராவின் தனி சாகித்யம் எனலாம்.*

பறவைகள் பேச்சைக்
கேட்டுக் கெட்டன
இலைகள், பாவம்...
பறக்க முடியாமல்
விழுந்து விட்டன.

*போன்ற 'மூர்ச்சை'களிலும்*

பின்னால் இருந்த
என் மடிச் சந்தில்
வந்து விழுந்தது.....
மாற்றான் தோட்டத்து
மல்லிகை
ஓடும் பேருந்தில்!

*போன்ற ரச பேதங்களிலும்*

இதுதான் வேலை
மல்லாந்து படுத்து
சிகரெட் புகையை
ஊதி ஊதித் தள்ளும்
எங்கள் ஊருக்கு வந்த
புதிய சிமெண்ட் ஆலை.

*போன்ற நறுக்குகளிலும் மீராவின் தனிப் பார்வை புலப்படுகிறது.*

O

குக்கூ எனக் கூவும் இந்தக் கவிதைகள் மீராவின் மௌனத்தை மட்டும் கலைக்கவில்லை. தமிழ்க் கவிதை உலகில் நிலவும் பேச்சற்ற பிடிவாத மௌனத்தையும் கலைக்கும் என எதிர் பார்க்கலாம்.

*பாலா*
***28-01-02***
***தங்கல்: தஞ்சை***

# முன்னுரை

அறுபதுகளில் வந்த ஈழத்து மஹாகவியின் 'குறும்பா'க்களில் மனம் பறிகொடுத்தவன் நான். அத்தொகுப்பை எத்தனையோ முறை படித்துச் சுவைத்துத் திளைத்தவன்.

ஆங்கிலத்தில் உள்ள Limericks என்னும் கவிதை வடிவத்தைக் கச்சிதமாகப் பயன்படுத்தித் தமிழ் மொழிக்கு அழகு சேர்த்தவர் மஹாகவி. அவருடைய குறும்பாக்களை அசைபோட்டு அசைபோட்டுப் பழகிய என் நா முதன் முதலில் ஒரு குறும்பாவை உதிர்த்தது.

ஐந்தாம் உலகத்தமிழ் மாநாடு மதுரையில் அமோகமாக நடந்து கொண்டிருந்த வேளை. மூன்று நான்கு நாட்கள் என்று நினைக்கிறேன். அந்தப் பெரிய சித்திரைத் திருவிழாவின் கள்ளழகர், மாண்புமிகு எம்.ஜி.ஆர். தினமும் கூட்டம் அலைமோதியது. பல்கலைக் கழகத் கருத்தரங்கத்தைத் தவிர, பட்டிமன்றம், கவியரங்கம், நாட்டியம், நாடகம், தெருக்கூத்து, இசை நிகழ்ச்சிகள் நடைபெற்ற இடங்களிலெல்லாம் ஏகப்பட்ட கூட்டம். அங்கங்கே கூடிய கூட்டம் பொறுமையாய் அங்கங்கே நிலை கொள்ளவில்லை. அங்கே என்ன கூட்டம், இங்கே என்ன அதிகக் கூட்டம் என்று ஒவ்வோர் இடமாகப் போய்க் கொண்டிருந்தது.

கூட்டம் தமிழுக்காக வந்ததாகத் தெரியவில்லை. வேடிக்கை பார்க்க, கூட்டத்தை வேடிக்கை பார்க்க வந்தது மாதிரி இருந்தது. இது என் மனத்தை உறுத்தியது.

அப்போது என் வாய் என்னையறியாமல் முணு முணுத்தது:

கூடல் நகரில்
கூட்டம்
கூட்டம் கூட்டம்
கூட்டம் கூட்டம் கூட்டம்
கூட்டம் பார்க்க!

இந்தக் கவிதையில் கூடல் நகரில், பார்க்க என்னும் இரண்டு வார்த்தைகளைத் தவிர திரும்பத் திரும்ப ஒலிப்பது 'கூட்டம்' என்னும் வார்த்தைதான். கூட்டத்தின் அடர்த்தியைக் காட்சிப்படுத்த அப்படி எழுதினேன்.

இதை ஏதோ ஒரு பத்திரிகையில் வெளியிட்டேன். கவிதையைப் படித்துவிட்டு கவியரசர் வைரமுத்து தம்பி பாலா போன்றோர் பாராட்டி எழுதியதாக ஞாபகம்.

மஹாகவியின் குறும்பா போலவோ ஆங்கில லிமரிக்ஸ் போலவோ அடி, சீர் வரையறை இல்லாமல் 'கூட்டம்' கவிதை போல் என் பாணியில் எழுதத் தொடங்கினேன்.

ஹைகூ என்னும் ஜப்பானியக் கவிதை வடிவம் தமிழ்க் கவிதையுலகில் சூறைக் காற்றாய் வீசிக் கொண்டிருந்த போது நான் 'குக்கூ' மழையில் நனைந்து கொண்டிருந்தேன். வீதியில் நடக்கும் போதும் பேருந்தில் பயணம் போகும் போதும் சில குக்கூக் கவிதைகள் மனதில் ஓடி வந்து ஒட்டிக்கொண்டன. வீட்டுக்கு வந்ததும் பழைய துண்டுக் காகிதங்களில் அவற்றை எழுதி வைத்தேன்.

கண்ணில் கண்ட காட்சிகளையெல்லாம் மேற்பூச்சு இல்லாமல் பதிவு செய்து வைத்தேன். சில கற்பனை களுக்கும் உயிர் கொடுத்தேன்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக எழுதிப்போட்டவை இவை. சில கவிதைகள் எழுதப்பட்ட பழைய தாள்கள் நைந்துபோய் விட்டன. சில கவிதைகள் களவு போயின.

எஞ்சியவற்றில் சில 'தினமணி' கதிரிலும், சில பால்ராஜ் கென்னடியின் 'வீடு' தொகுப்பிலும் சில 'அன்னம் விடு தூது'விலும், சில திரு.இந்திரன் தொகுத்த Meera's Se-

lected Poems என்னும் தமிழ் - ஆங்கிலம் இணைந்த இருமொழித் தொகுப்பிலும் இடம் பெற்றன.

என் குறும்பாக்கள் நூலுருப் பெற இப்போதுதான் நேரம் வாய்த்திருக்கிறது.

இதில் உள்ள கவிதைகளை வாசகர்கள் ஓடுகிற ஓட்டத்தில் படித்துத் தூக்கி எறிந்து விடாமல் கொஞ்சம் நிதானமாகப் படிக்கவேண்டும்.

சரஸ்வதி பூசைக்குப் போனால் பொரி கடலை கொடுப்பார்கள். அதில் கடலையை விட பொரிதான் அதிகம் இருக்கும். இருந்தாலும் பொரியை எடுத்தெறியாமல் கடலையுடன் சேர்த்துச் சுவைப்பதைப் போல் எல்லாக் கவிதைகளையும் சுவைக்க வேண்டும்.

○

கடலைக் கவிதைகள் சிலவற்றை அடையாளங்காட்டி அவருக்கேயுரிய தனித்தன்மை நிறைந்த பார்வையுடன் 'குக்கூ' கவிதைகளுக்கு ஓர் அழகிய அணிந்துரை வழங்கியுள்ளார் கவிக்கோ அப்துல் ரகுமான். ஹைக்கூ கவிதைகளைத் தொடங்கி வைத்துத் தமிழ் இளைஞர்களை அந்தத் திசையில் திருப்பிவிட்ட ரகுமான் என் குக்கூ கவிதைகளின் இயல்புகளையும் சீர்மைகளையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். அத்துடன் அண்ணாவின் தம்பியாக இருந்த நான் பொதுவுடைமைச் சிந்தனைக்கு ஆட்பட்டு விட்டதாகக் குறைப்பட்டுக் கொண்டுள்ளார். இந்த அணிந்துரையில் குழுமனப்பான்மையுடன் தான் என்னை முற்போக்குத் திறனாய்வாளர்கள் கொண்டாடினார்கள் என்கிறார். இதற்கு இங்கே நான் பதில் சொல்ல விரும்பவில்லை. திறனாய்வாளர்களே பதில் சொல்லட்டும்.

'குக்கூ'வில் பின்பற்றப்பட்டுள்ள இயைபுத் தொடை பல இடங்களில் செயற்கையாகப்படுகிறது என்கிறார் கவிக்கோ. நியாயமான விமர்சனம்.

கலை (Art) செய்கலை (Craft) இரண்டுக்கும் இலக்கியத்தில் இடம் உண்டு. இதில் உள்ள சில கவிதைகள் முதல் வகையையும் பலகவிதைகள் இரண்டாம் வகையையும் சேர்ந்தவை. இப்படித்தான் நான் சமாதானம் சொல்ல முடியும். குழந்தைகளோடு குழந்தையாய் சில பொம்மைகளும் இருந்துவிட்டுப் போகட்டுமே!

○

பாலா இத்தொகுப்புக்கு மூன்று மாதங்களுக்கு முன்பே ஒரு மதிப்புரை எழுதித் கொடுத்திருக்கிறார்.

அவர் சிறந்த புதுக்கவிஞர். சிறந்த சிந்தனையாளர். சிறந்த பேராசிரியர். சிறந்த பேச்சாளர். சிறந்த திறனாய்வாளர். சிறந்த மனிதர்.

68, 69 ஆம் ஆண்டுகளில் ஒருமுறை இராசிபுரம் போயிருந்தபோது பாலாவைச் சந்தித்தேன். பேசிக் கொண்டிருந்தபோதுதான் அவர் என் உறவினர், என் ஊர்க்காரர், என் மாணவர் என்பது தெரியவந்தது. அதற்குப்பிறகு சிவகங்கைக்கு வந்தால் என்னைச் சந்திக்காமல் அவர் சென்றதில்லை.

என்னுடைய புகழ் வெளிச்சத்துக்கு அவர் முக்கிய ஒரு காரணம். ஆங்கிலக் கவிஞர்களுக்கு நிகராக பெரிய வடிவத்தில் ஆங்கிலத்தில் என் வாழ்க்கைத் தொகுப்பேடு ஒன்றை (Monograph) சொந்தச் செலவில் வெளி யிட்டுள்ளார். இது எனக்குக் கிடைத்த தனி கௌரவம். 'தாகூரின் கீதாஞ்சலியும் மீராவின் கனவுகளும்' என்று ஆங்கிலத்தில் ஒரு மாணவி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் எம்.ஃபில் ஆராய்ச்சி செய்யத் தூண்டு கோலாயிருந்திருக்கிறார். அந்த ஆய்வேட்டைப் படித்து நான் ஆச்சரியப்பட்டேன். அவ்வளவு அருமையான ஒப்பீடு. பாலா இப்படிப் பல்கலைக்கழக ட்டத்திலும் என்னை உயர்த்தி வைத்துள்ளார்.

*அவரிடம் மதிப்புரை வாங்குவது ஐ.எஸ்.ஐ முத்திரை பெறுவதைப் போன்றது.*

இந்த குக்கூக் கவிதைகளைப் படித்துவிட்டு 'ஜப்பானிய உடையுமில்லை, நடையுமில்லை. இது ஹைகூ இல்லை. தமிழ்க்கூ' என்ற புகழாரம் சூட்டியுள்ளார். கவிக்கோ எடுத்துக்காட்டாத சில கவிதைகளை மதிப்புரையில் சுட்டிக் காட்டி விளக்கியிருக்கிறார்.

○

அணிந்துரை, மதிப்புரை தவிர கவிஞர் தமிழ்நாடன் என்னைப் பற்றி - என் பன்முகப் பார்வை, பங்களிப்பு பற்றி எழுதிய கட்டுரையைப் பின்னுரையாக இணைத்துள்ளேன். சென்ற ஏப்ரல் 'தாமரை'யில் வெளிவந்தது அது.

அதைப் படித்துவிட்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் திரு.ஆர்.என்.கே அவர்கள் இருவரையும் பெரிதும் பாராட்டி எனக்கு ஒரு கடிதம் எழுதினார்.

75 இல் 'அகரம்' தொடங்கப்பெற்ற போது புத்தக ஆக்கம் எப்படி இருக்க வேண்டும் என்று எனக்குக் கற்பித்தவர் தமிழ்நாடன். எழுத்துத் துறையில் நிறைய சாதனை புரிந்தவர். *அம்மா அம்மா, மண்ணின் மாண்பு* போன்ற கவிதைத் தொகுதிகள் மூலம் நிலைத்து நிற்பவர்.

○

இந்தச் சின்னத் தொகுப்புக்கு உள்ளபடியே 'கனம்' சேர்த்த மூவர்க்கும் இளநீர் வார்த்தைகளால் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கவிக்கோ விருதை டாக்டர் கலைஞர் கைகளால் பெறும் பொன்னாளில், *'மீரா கவிதைகள்' 'கோடையும் வசந்தமும்'* தொகுதிகளுடன் இக்குட்டிக் தொகுப்பையும் வெளிவர வைத்த கவிக்கோவின் மருமகன் திரு. அயாஷ் பாஷா சகோதரர் சோலை, திரு.சமரசம் போன்ற கவிக்கோ

அறக்கட்டளைப் பொறுப்பாளர்களுக்கும் கவிக்கோ அறக்கட்டளை உருவாகக் காரணமாயிருந்த வாணியம்பாடி, ஆம்பூர், குடியேற்றம், வேலூர் முதலிய ஊர்களில் வாழும் கவிக்கோவின் மெய்யன்பர்களுக்கும் பதனீர் வார்த்தைகளால் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

○

'குக்கூ'வை வெளியிடும் என் மகன் கதிரின் தஞ்சை அகரத்துக்கு என் வாழ்த்துக்கள்.

*மீரா*

*10.6.2002*

*அகரம்*
*சிவன் கோயில் தெற்குத் தெரு*
*சிவகங்கை.*

# காணிக்கை

கவிக்கோவுக்கும் எனக்கும் ஆருயிர்
நண்பர் - வகுப்புத் தோழர் பேராசிரியர்
**இ.சு.பாலசுந்தரம்** அவர்களுக்கு.

## 1



கூடல் நகரில்
கூட்டம்
கூட்டம் கூட்டம்
கூட்டம் கூட்டம் கூட்டம்
கூட்டம் பார்க்க.....

## 2



இலக்கியக் கூட்டம்;
பரவசமூட்டும்
பக்திக் கூட்டம்
எந்தக் கூட்டம் என்றாலும்
வைர மூக்குத்தி கடுக்கன் சகிதம்
முன்னால் இருப்பாள்
அந்த மாது
காது மட்டும் கேட்காது.

## 3



வீணை ஒன்று
விழுந்து கிடந்தது காட்டில்;
விறகு வெட்டியின்
கண்ணில் பட்டது
வெந்து முடிந்தது வீட்டில்.

## 4




ஆடி வீதியில்
கடை பரப்பிக்
காலையும் பரப்பி
விற்கிறாள் ஒரு கிழம்
குவியல் குவியலாய்
அழுகல் மாம்பழம்.

## 5



மார்கழி மாத விடியல்
குளித்து முடித்துக்
குங்குமப் பொட்டிட்டு
மலம் அள்ள வந்தாள்
தோட்டி மகள்.

## 6



கோழியும் சேவலும்
குப்பையைக் கிளறும்
விடியற் காலையில்
கண்மூடிக் கிடக்கும்
ஊர்நாய் ஒரு மூலையில்,
இரவெல்லாம் குரைத்த அசதியில்.

## 7



குச்சிப் பயலுக்கு
கந்தகத் தலைப் பாகை சின்னதாய்
பிடித்திழுத்தால்
எரிந்து விழுகிறான் என்னமாய்!

## 8



என் உள்ளங்கையில்
ஊர்ந்த
பட்டுப் பூச்சியின்
உடம்பெல்லாம் ரணம்
ரத்த ஆபரணம்.

## 9



கலைத்தாராம் தவம்,
கதைக்கிறார் சில
விநோத விசித்திரர்;
மேனகை நீ வர
வேண்டுமன்றல்லவா
தவம் புரிந்தார்
அந்த விசுவாமித்திரர்.

## 10



எருமை
புல்லைக் கடித்து மென்றது
எருமை முதுகின்
புண்ணைக் கொத்தித் தின்றது
அண்டங் காக்கை.

## 11



குயில் மயில் தென்றல்
கொஞ்சம் எதுகை மோனை
கூடவே கள்ளுப் பானை...
அட, அப்புறம் என்ன
ஆஸ்தான கவியே ஆகலாம்.

## 12

வாசற்படிக்குப்
பொருத்தம் என்றேன்
வழியில் கிடந்த
கல்லை எடுத்து;
'ஐயோ சாமி'
என்றொரு குரல்
வந்தது அடுத்து.



## 13



புகழை நட நான
போர்க்களம் போகிறேன்
என்றான் பாவிப் பயல்
இப்போது பாவம் இவள்
அறுத்து முடித்த வயல்.

## 14



ஊரெங்கும்
திருவிழாக் கோலம்
மக்கள் நெருக்கம்
மல்லிகைச் சரமாய்

நான் மட்டும்
ஒதுங்கியிருந்தேன்
ஒற்றைப் பனை மரமாய்.


## 15



இரண்டே இரண்டு
இனியவை; ஒன்று உன்
இருவிழிப் பார்வை
ஈர்க்கும் காந்தம்
இன்னொன்று; ஏகாந்தம்.

## 16

தெருவெங்கும்
கார்த்திகைத் தீபம்;
தேடினேன்
ஒவ்வொன்றின்
ஒளிச்சுடரின் ஊடே
உன் சொரூபம்.



## 17



அவன் அவள்
முதல் இரவின்
மோகன உறவில்
முட்டி மோதி
உடைகிற தந்தத்
தாஜ்மகல்.

## 18



எள்ளளவும் இல்லை
முன் யோசனை....
ஓடி அலுத்துத்
தேடிச் சலித்துக்
கடைசியில் மான்
கமழக் கண்டது,
தன்னுள்
கஸ்தூரி வாசனை.

## 19



கும்பிட்டுப் போனான்
குமரன் தீமூட்டி;
மல்லிசேரி பீடியை
எடுத்துப் பற்ற வைத்தான்
மயானத் தோட்டி
எரியும் அப்பா பிணத்தில்.

## 20



விழும்போதெல்லாம்
மீசையில் ஒட்டவேண்டும்
இந்தச் செம்மண்;
ஏனெனில் எம்மண்.

## 21



இரவில்
அடுத்த வீட்டில்
பால்குடித்த அசதி,
பகலில் வந்து
படுக்கப் பூனைக்கு
என் வீட்டு மாடி வசதி.



## 22

விலகா தென்னைத்
தொடரும்
விடாப் பிடியாய்....
செத்தால் தான்
தொலையுமா நிழல்
ஒரேயடியாய்.

## 23



கண்டு பிடித்தேன்
கைக்குட்டையை நொடியில்
கரித்துணியாய்
அடுப்படியில்

## 24



வருக வருக வாசகம்
வாசலில்....
கொல்லையில்
எச்சில் இலைக்கு
இந்நாட்டு மன்னர் யாசகம்.

## 25

தலையில் இருக்கும்
தண்ணீர்க் குடம்....
தலைவன் எதிர்வரும்
அடுத்த வினாடியே
அது- தங்க மகுடம்.





## 26

கல்தான் முள்தான்
காலில் குத்தும் நெருஞ்சி;
கடந்து போ
மேலே மேலே
நடந்து போ....
கண்ணைக் கவரும் குறிஞ்சி.

## 27



சாணை பிடிக்கும்
போது தெறிக்கும்
பொறியில் தெரியும்
எனக்கொரு
சங்கீத ஆலாபனை,
சதிராட்ட ஒப்பனை..

## 28



பொழுது விடிந்தால் போதும்
புறப்பட்டு வருவான்,
பளப்பளப்பான முகம் காட்டி
பாவம், ஏமாந்து விடுவாள்
பச்சையுடல் மஞ்சள் முகம்
படைத்த சீமாட்டி.

## 29



குழாயிலிருந்து
விழுந்தது தண்ணீர் கனமாய்
சுற்றும் முற்றும்
பார்த்துவிட்டுத்
தொட்டியில் விழுந்தேன்
அம்மணமாய்.....

## 30



ஆயிரம் ஈக்கள்
மொய்க்கும் ஆசையில்
வானத் தட்டில்
இராத்திரிக் கிழவி
சுட்டு வைத்த
ஒற்றைத் தோசையில்

## 31



உச்சி மலையில்
தவம் செய்தொரு மரம்
கேட்கும் வரம்....
சாலையில் நிற்க.

## 32



வாசலில் வந்து
மறந்து நின்று
மௌனமாய்த் திரும்பினாள்
பூக்காரி;
அவள் கவலை
யாரிடம் விற்பது?
அவன் கவலை
யாருக்கு வைப்பது?

## 33



கழிவுகள் எல்லாம்
கலந்து கரைந்து
அசுத்தமானது
ஆற்றின் உடல்....
கழுவ வேண்டும்... வேண்டும்
கட்டாயம் ஒரு கடல்.

## 34



வீடு கட்டினேன்
சுடு காட்டுக் கெதிரில்,
எந்த நேரமும்
விடைபெறலாம் எளிதில்.

## 35




தலைநகர் தலைநகர்தான்
ஆளுயரச் சுவரொட்டியில்
ஒன்றேனும்
காண முடியுமா....
இந்தப் பட்டி தொட்டியில்.

## 36



துருபதன் மகளை
நிருவாணக் கோலத்தில்
நிறுத்த நினைத்த
நீசர்க் கெதிராய்க்
கண்ணன் கொடுத்த துகில்,
இன்னுமா நீள்கிறது
குற்றாலத்தில்?

## 37




வசந்தம் வந்தது;
பூமி வேசி
புதுமஞ்சள் பூசி
சதிராடிச் சிரிப்பாள்
சரக்கொன்றை மரத்துக்கடியில்.

## 38




நாளெல்லாம்
டீசல் சாராய
நாற்றம் உமிழும்
நகரத்துப் பேருந்தில்
காலையில் மட்டும்
கறிவேப்பிலை
மணங்கமழும்
கறிகாய்க்காரக்
கண்ணம்மாவால்

# 39



தூங்கிக் கிடக்கும்
தோட்டத்தில்
தளிர் கிளை மொட்டு
இதமாய்த் தொட்டு
தேவ ரகசியம்
சொல்லிப் போகும்
சாம நிலா

# 40



பாதிச் சண்டை
பங்காளிச் சண்டை
அதோ.... கடல் ஆத்தாளின்
ஆயிரம் பிள்ளை அலைகள்.....
முட்டி மோதி
சிதறுகாயாகும்
அவற்றின் தலைகள்.

# 41



மேலே மேலே
பூக்கடை
கீழே......
நாறும் சாக்கடை.

# 42



வாத்தியார் மனைவி
செத்ததற்காக
விடுமுறை......
மகிழ்ச்சியில் குதித்த
மணிப்பயல் கேட்டான்:
'வருத்தமாயிருக்கு,
ஒரே ஒரு மனைவிதானா
அவருக்கு.'

## 43



கண்மாய் நிறைந்தால்
குதித்துக் குதித்துக்
கும்மாளம் போட்டுக்
கட்டிப் பிடிக்கலாம்
வற்றிவிட்டால்
வசமாய்
மீன் பிடிக்கலாம்.

## 44



கோரப்புயல்
சாய்ந்தன சரிந்தன
கோடி மரங்கள்
தப்பின
சில கொடி மரங்கள்.

## 45



பீடு நடை போடுகின்றன
எங்கள் கிராமங்கள்
நகரத்தை நோக்கி
நண்பகல் ஒரு மணிக்குமேல்
பட்டணத்துப் படக்காட்சியை
மனத்தில் தூக்கி.



## 46

'குடிமகன்' ஒருவன்
கூறினான்
தள்ளாடி நின்று
தாத்தா காந்திதான்
சுதந்திரம் வாங்கித்
தந்தார் என்று.

## 47



என் கல்லறையைச்
சுற்றிச் சுற்றி
வருகிறது - இதோ
ஆசையாய்
மடியில் வைத்துச்
சோறூட்டிய நாய்.

## 48



உறவினர் வீட்டுக்
கல்யாணங்களுக்காய்க்
காத்துக் கிடக்கும் பெட்டியில்;
என் மனைவியின்
ஏழெட்டுப் பட்டுச் சேலைகள்
- வெட்டியில்...

## 49



தோளில் ஏறித்
தொற்றிக் கொண்டா
தோகை கன்னம் தொடுவது?
சூ மந்திரக்காளி......
நான் அந்தக்
கிளியாகக் கடவது!



## 50

யாரோ வைத்த நெருப்பில்
ஏழைக் குடிசைகள் எரிந்தன;
வளரும் புகையில்
மாளிகை சில தெரிந்தன.

## 51



தேக்கடிக் கரையில்
துதிக்கையைத்
தூக்கிக் காட்டிக்
குட்டியிடத்தில் சொன்னது
யானை ஒன்று,
'அதோ பார் படகில்
மனிதர்கள்' என்று.



## 52

கொஞ்சமும் அலுக்காமல்
ஆலமரம்
எத்தனை காலம் இப்படி
தண்ணீரில் முகம் பார்க்கும்
கரையில் நின்றபடி.

## 53



சிறகிருந்தாலும்
செம்மறி முதுகில்
அமர்ந்து செல்லும்
சுகமே சுகமெனச்
சொல்லாமல் சொல்லும்
கரிச்சான் குருவி.

## 54



காவல் நிலையம் அருகில்
மலர்ந்த பூக்கள்
விற்கும் இந்தப்
பூக்காரிகளின்
முகங்களைச்
செய்தது யார் சருகில்?

## 55



நாளை பெருநாள்....
அறிந்தோ என்னவோ
தங்களுக்காக
அனுதாப ஊர்வலம்
போகும் ஆடுகள்
முன்னதாக ஒருநாள்.

## 56



காலம் கலிகாலம்
எல்லாம் நடக்கும் மாறாய்
முள்ளில்லாத ஒரு
ரோஜாப் பூ
முகம் மலரும்
தாமரைப் பொய்கையில் ஜோராய்.

## 57



விரிந்த வானில்
இருள்வலை வந்து
விழும் வரைக்குமா
காத்திருக்கும் கொக்கு
உறுமீனுக்கு?

## 58




தினமும் நீ வரும்
என் தெருவுக்கு
வந்து விட்டது
தீயணைப்பு நிலையம்,
பன்னீர் அரசின் உபயம்;
இனி எனக்கில்லை பயம்!
அடி அக்கினி புத்திரீ!

# 59



மூக்கில் துணி
காதில் துணி
கண்கள் மூடிக்
கிடந்தேன் பிணமாய்
உயிர்த்துடிப்புடன்
நடித்து முடித்ததும்
வீட்டில் வாங்கி
மாட்டி வைத்தேன் படமாய்!

# 60



எங்கள் பூமியில்
இனிதாய் விளைந்தது
நெல்கரும்பு
நெஞ்சம் மணக்கும் பூ....
இப்போது புதிதாய் ஆரம்பம்
அந்தோ பூகம்பம்.

## 61



இதுவரை காணா
இந்திரப் பேரெழில்
இன்று கிடைத்தது;
விட்டு விடுமா
என் கண்.... இமைக்
கதவை அடைத்தது!



## 62

காயா பழமா
என்ன கேள்வி?
என் இனிய தேவி,
எனக்குத் தேவை பூ!

## 63



நகர்க்கரம் தீண்டும்
கிராமத்து வயல்களில்
காணோம் செந்நெல்
முளைத்துள்ள தெங்கும்
வெள்ளையடித்த
முக்காலடிக்கல்.

## 64

தலையில் கனத்த
ஆனை மலைக்கல்
வயிற்றில் குழந்தை.....
போதாதென்று
போனஸ் சுமையாய்
கடுக்கும் காலில்
குத்தும் உடைமுள்.



## 65



இதுதான் வேலை
மல்லாந்து படுத்து
சிகரெட் புகையை
ஊதி ஊதித் தள்ளும்
எங்கள் ஊருக்கு வந்த
புதிய சிமெண்ட் ஆலை.





## 66

மரத்தின் அடியில்
சருகுக் குவியல் எரிந்தது;
பார்த்துக் கொண்டிருந்த
சலசல இலைகளுக்கு
அர்த்தம் புரிந்தது.

## 67

பறவைகள் பேச்சைக்
கேட்டுக் கெட்டன
இலைகள், பாவம்....
பறக்க முடியாமல்
விழுந்து விட்டன.





## 68

அட தெரிந்து கொள்
'அவள் என் தேவதை'
அசரீரி சொன்னது.
'புரிந்துகொள்
பார்க்கப் போகிறாள் அவள்
சிறுகச் சிறுக நீ சாவதை'!

## 69



பின்னால் இருந்த
என் மடிச் சந்தில்
வந்து விழுந்தது...
மாற்றான் தோட்டத்து
மல்லிகை
ஓடும் பேருந்தில்!



## 70

சுகமாய்த்
தூங்கப் போனது மரம்
தொட்டிழுத்துக்
குறும்பு செய்தது
காற்றின் கரம்.



## 71

கண்களின் சிமிட்டல்
'காமரா'வாய்
இதயத்துள் உன்
புகைப்படம்.....
அபாரமாய்.



## 72

திசையெங்கும்
இருள் திரைகள்....
வைகறை வந்தது;
கம்பீரமாய்க்
கண்விழித்துப் பாய்கின்றன
கதிர்க் குதிரைகள்!

## 73



தாயின் கர்ப்பத்தைக்
கண்டு பிடிக்கும்
தணியாத ஆசையில்
தரையை இடிக்கும்
ஆலம் விழுதுகள்

## 74



அழுக்கைத் தின்னும்
மீனைத் தின்னும்
கொக்கைத் தின்னும்
மனிதனைத் தின்னும் - பசி



## 75

கனவு கண்டேன் நான்.....
கனவில் நன்றாய்த்
தூங்கக் கண்டேன் - நான்.

## 76



இரவில் சந்திரன்
பகலில் சூரியன்
இரண்டும் இல்லாக் காலம்
உன்னிடம் வேண்டி
ஒளிபெறும் ஞாலம்!

77



தண்ணீர்க் குள்ளே
கிடக்கும் சிப்பி
ஒரு - கண்ணீர்த் துளிக்காய்
நெஞ்சில் முத்துக்
காதல் நிரப்பி.



78


போதும் என்று
புறப்பட்டேன்
விடவில்லை சுலபத்தில்;
நீலமலை மேகங்கள்
பன்னீர் தெளித்தன
பேருந்தின் சன்னலோரம்
பயணம் செய்த என் முகத்தில்.

## 79



சர்க்கஸ் முடிந்த
மறுநாள் மாலையில்
தந்திக்கம்பியில்
குருவிகள் வரிசையாய்
இருப்பதைப் பார்த்து,
கோவணச் சிறுவர்கள்
குதூகலத்துடன்
தட்டுவார்கள் கைகள் சேர்த்து

## 80



பெட்டிக் கடைக்காரன்
சைக்கிளின் பின்னால்
கடத்தப் பட்ட
பனிப் பெண்
கண்ணீர் முத்தைச்
சிந்திக் கொண்டே போகிறாள்;
எதுவும் செய்யமுடியவில்லை என்னால்.

## 81



அரசியல் அப்பா
'தமிழ்' எனப் பெயர் வைத்து
அழைத்தார் அப்ப...
திரையில்
தமிழ் ஸ்ரீ என்று
அறிமுகமாகிறாள் மகள் இப்ப.



## 82

பழமை புதுமை
இரண்டுக்கும் நாங்கள் பாலம்
எலி வாகனம்
ஹெலிகாப்டர் வாகனம்
இரண்டையும் கொண்டாடும்
எங்கள் காலம்!

## 83



கார்காலக் கருக்கிருட்டில்
செடிகள் கொடிகள்
செழித்த காட்டில்
யார் பேனாவிலிருந்து
வெளிவருகின்றன
இத்தனை மின் எழுத்துகள்.

## 84



மார்கழி பிறந்தது...
காலையில் வாசலில்
நீ போடுவதென்ன கோலமா?
இல்லை இந்த
ஏழை மனத்தை ஏலமா?

## 85



மழை பெய்கிறது
கையில் ஒரு குடை....
கண்ணே வா;
இருவரும் இணைந்து
சுகம் காணலாம் நனைந்து.




## 86

என்றோ ஒருநாள்
இந்துமாக் கடலில்
மூழ்கிக் கிடந்ததாம் இமயம்;
இன்றோ
உன் நினைவின் ஆழத்தில்
மூழ்கிக் கிடக்கும்
கவிதைகளாலே கனத்த என் இதயம்.

## 87

ஓடும் ரயிலில்
உட்கார்ந்திருந்த
அணங்கின் பார்வையில் ஏக்கம்
நாகரிகமாய் நகர்ந்தேன்;
நன்றி சொல்லாமல்
நீட்டிப் படுத்தாள்;
நல்ல தூக்கம்!



## 88

சொல்லில் அடங்கா ஆத்திரம்
சும்மா விடக்கூடாது அவளை
கொண்டு வந்து
கொட்டுங்கள்
கோடி ரோஜாப் பூக்களை.



## 89


பௌர்மணிக் கிண்ணத்தில்
பனிப்பழம்.....
எடுத்துச் சுரண்டி
இனிதாய்ச் சாப்பிட
வேண்டும் -
ஒரு நீளக் கரண்டி.






## 90

சொன்னதாரோ....
தன் வலை தானே என்று
உரிமையோடு நின்று
உள்ளே வந்து
ஒளிந்து கொள்ளும்
கொசுக்கள்!



## 91

செத்த பிணத்தைக்
கட்டி அழலாம்
முடிந்தால்
காட்டி அள்ளலாம்!




## 92

மாலை கட்டும்
மயில் சாமி மனம்
மகிழும் இன்று
மாலை சூட்டும்
மாப்பிள்ளை ஆகிறான்,
நாளை நன்று!

## 93



தாமரைத் தடாகம்;
ஒற்றைக் காலில் நிற்கும்
வெள்ளைக்கார
விருந்தினனர்க்குப்
பசியோ அபாரம்....
இலைகள் விரித்திருந்தும்
பரிமாறவில்லை
உணவை யாரும்!



## 94

இது என்ன நியாயம்
இருக்கிறேனோ இல்லையோ
உன் நினைவின் ஓரத்தில்,
என் நெஞ்சம் முழுதும் அழுந்தும்
உன் அழகின் பாரத்தில்.



## 95

கடன் கொடுக்கும்
கலையில் தேர்ந்த
அதிகாரிக்குப்
புயல் அறிவிப்பென்றால்போதும்
தென்றலாய் இதம்தரும் எப்போதும்!



## 96

விரிந்து பரந்த சமுத்திரம்
வீசலாம் வலை
விளையாடும் அலை
குடிக்க மட்டும்
கிடைப்பதில்லை
தண்ணீர் ஒரு திவலை.

## 97



கருப்பண்ண சாமி கோயிலில்
வெட்டப்பட்ட
ஆட்டைப் பார்த்துக்
கால்கள் சேர்த்துக்
கட்டப்பட்ட கோழிகள்
தொண்டைக்-குழிக்குள்
தொடர்கதை எழுதும்.



## 98

பக்கத்து வீட்டுப்
பையனைப் பிடிக்கும்..
இதுவரைக்கும் அவன்
எனக்கு எழுதவில்லை
எந்தக் காதல் கடிதமும்
என் தமிழ் பிழைக்கும்.



## 99

கண்ணுப் பாப்பா
கடித்து வைத்தது
சாமிக்குப் பக்கத்தில்
மிட்டாய் பெரிசாய்
எறும்புகள் வந்தன வரிசையாய்
மிட்டாய் கும்பிட.



## 100

குளத்தில் பிடித்த மீனை
கிணற்றுள் போட்டு வளர்த்தான்
தொட்டியில் போட்டு எடுத்தான்
சட்டியில் போட்டு வறுத்தான்
வயிற்றில் போட்டு முடித்தான்.

# 101



கிணற்றுச் சுவருள்
ஒட்டி யிருந்தாலும்
வானவெளியில்
கொட்டியிருந்தாலும்
இருள் இருளே!

# 102



காலையில் பொங்கல்வடை
மாலையில்
கடற்கரைச் சாலையில்
ஒரு தொங்கல் நடை
இவை தவிர
இத்தனை வருடம் இருந்தும்
என்ன கண்டேன் இந்தச்
சென்னை நகரில்.



## 103


இதயத்தில் என்ன விரிசல்
மோக மேகம்
முகம் திருப்பிப்போகும்
தாகத்துடன் காத்திருக்கும் கரிசல்.




## 104

இருட்டு நீரை
ஊற்றிவிட்டான்....ஓ
விரும்பிய மட்டும்
மணம் பரப்பும்
விடியல் பூ.

# 105



சூரியன் மறைந்துவிட்டான்
என்று நீ
சோர்ந்து விழாதே;
சந்திரன் வரும்
நட்சத்திரங்கள் வரும்
வலைத்துப் பிடி விடாதே!



# 106

காற்று வரட்டுமென்று
சாளரம் திறந்தேன்
சந்தைக் கூட்டம்
மந்தைக் கூட்டம்
சரசரவென்று பாய்ந்தது பார்வையில்
ஐக்கியமாகிச்
சிட்டாய்ப் பறந்தேன்.



# 107

முகமூடி போட்டேன்
குழந்தைக்கு வேடிக்கை காட்ட;
முடியவில்லை அதற்குப்பின்
முகத்தைச் சும்மா நீட்ட.



# 108

சலசலக்கும் ஆரவாரமாய்
இலைகள் ஆயிரம்
பக்குவமுள்ள பூ
படிக்கும் மௌனப் பாயிரம்.

## 109



அகத்தைக் கேட்டேன்
கண்ணாடி வேண்டுமா
பார்த்துக் கொள்ள;
அகம் சொன்னது
'அகம்பாவம் இல்லை
பார்த்துச் சொல்ல..'



## 110

நேற்று உண்ணும் அரிசி நொறுங்கல்
இன்று உண்ணும் அரிசியில் சிறுங்கல்
நாளை உண்ணக் கிடைப்பதோ வெறுங்கல்.

# மீரா நம் மீரா....

## கவிஞர் தமிழ்நாடன்

பக்த மீராவை பாரதத்திற்கு மறு அறிமுகம் செய்வித்தவர் அண்ணல் காந்தி. நம் கவிஞர் மீராவை தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்தவர் அறிஞர் அண்ணா. கல்லூரி மாணவர் மீரா கவிஞர் மீரா என்று அண்ணாவின் வாய்வழி அறியப்பட்டதும், அக்கால மேடைகளில் சங்கப் புலவர்களோடு, புரட்சிக்கவி பாரதிதாசனோடு மீராவும் மேற்கோள் ஆனார். மீராவின் படைப்புப் புதுமை குறித்து ஆய்வுரைகள் நிறைய இதழ்களிலும், பல்கலைக் கழகங்களிலும், பாரதி வழி பாரதிதாசன் போல மீரா வழி மீராதாசன் என்றொரு கவிஞர்.

மதுரைத் தியாகராசர் கல்லூரி மாணவர் மீராவின் கனவுகளில் ஒன்று பெங்குவின் நிறுவனம் போலப் புத்தகங்கள் வெளியிடுவது. அவரின் இளமைக்கனவு அன்னத்தின் வழி நனவாயிற்று. மீரா, அப்துல் ரகுமான், அவர்களது அணுக்கத் தோழர்கள் ஆகியோரின் கூட்டமைப்புப் பதிப்பகம் அன்னம். பெங்குவின் பறவையின் தமிழ் வடிவமே அன்னம். அன்னம் வால்மீகி காலத்திலிருந்து பாலை அருந்தி தண்ணீரைத் தள்ளி விடுமாம். இது சாத்தியமா, தண்ணீரே பாலாய்ப் போன நம் காலத்தில். என்றாலும் மீராவின் அன்னம் பால் போலும் நல்ல கவிதை நூல்கள் பலவற்றை வெளியிட்டிருக்கிறது. அவற்றில் சில திரட்டுப்பால்.

பாரதி, பாரதிராசனின் பெருமை என்ன? வளரும் கவிஞர்களைத் தன் உடன் பிறப்புகளாக ஏற்றுத் தம் இலக்கிய வம்சம் நிலைபெறவும் நீடிக்கவும் செய்ததாம். பாரதியின் கவிதா மண்டலம் தான் பாரதிதாசன் என்னும் மற்றொரு மகாகவியை வளர்த்தளித்தது. பாரதிதாசனின் குயில் இதழே முடியரசன், வாணிதாசன், பொன்னடியான் போலும் பாரதிதாசன் பரம்பரை வளர்ந்த நாற்றங்கால். இவை போன்றன தமிழ்க் கவிதை வரலாறு இடைவெளியற்றுத் தொடரக் காரணங்களாம்.

மீரா, கவி, அன்னம் விடுதூது என்றெல்லாம் இதழ்கள் நடத்தினார். கவிதையும் கவிதையியலுமே முதன்மை. அவற்றில் அறிமுகம் ஆகிய புதுமுகக் கவிஞர்கள் ஏராளம். ஒரு கவிஞரின் முதல் கவிதை தொகுதியை வெளியிடுவது, விற்பது எளிதல்ல. புதுமுகம் அறிமுகப்படுத்தி சினிமா எடுக்கும் முயற்சி அது. நட்டம் நிச்சயம். புகழ் அடுத்தே.

அகரம், அன்னத்தின் துணை அமைப்பு. இலக்கியத்தில் முதற்பூக்களை வெளியிடுவது அகரத்தின் இலட்சியம். அதற்கென்றே 'நவகவிதை' என்றொரு வரிசைக் கவிதை வெளியிட்டார். அகரம் வழி பலரது கையெழுத்து அச்செழுத்தாகி தமிழர் மன ஏட்டில் பதிந்தது. நம் எழுத்து அச்சாகுமா என்று உள்ளம் குமைந்து கிடந்த இளைஞர்களது படைப்பை அவர்களே ஆச்சரியப்படும் படியான அச்சுக்கலை நுட்பத்தோடு வெளியிட்டார் மீரா.

நாமறிந்த தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய கவிஞர்களை ஓர் இலக்கிய வெறியோடு அறிமுகப் படுத்தியவர் மீராவே. பெருங்கவிஞர்கள் வளர் கவிஞர்களுக்குச் செய்த தியாகம் சிறுபொழுது, நல்வார்த்தை, தம் இதழில் ஓரிரு பக்கங்கள். ஒப்பிட்டுப் பார்க்க மீராவின் செயல்; பல நாட்கள், ஆய்வு முன்னுரை. பணம் ஆயிரங்களில். எப்போதாவது யாரோ ஒருவருக்கு எனில் அதில் விசேடமில்லை. இலக்கிய வள்ளல் மீரா எப்போதுமே அப்படி.

அன்னம் பதிப்பகம் தொடங்கிய காலம் வாழும் கவிஞர் யாவரும் அன்னத்தை நாடிச் சென்றனர். நல்ல கவிஞருக்கு இடம் கொடுத்து மகிழ்ந்தது அன்னம். தம் குருவான சிற்பி தனபால் அவர்களைக் கலைஞர்களின் சரணாலயம் என்றார் ஓவியர் ஆதிமூலம். அணு அளவும் மிகையிலா வார்த்தை. அதைப் போலவே, கவிஞர் மீரா கவிஞர்களின் சரணாலயம்.

மீராவின் கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள். கவிதைத் தொகுதி எழுபதுகளின் இளைஞர் பலரின் தூக்கத்தைக் கெடுத்தது. மீரா தன் காதலிக்கு வரைந்த காதலுரையை காதலர் தம் காதலியர்க்கு மறுபதிப்புச் செய்தனர். வெகுசிலர் மீரா கவிதை அது என்று குறிப்பிடாமலேயே தம் கவிதையாய்ப் பாவித்தனர். மீராவின் கவிதை காதல் தூதுக்குப் பயன்பட்டு பல ஜோடிகள் திருமணம் ஆகி இன்று குட்டிப் பேரன் பேத்திகளோடு. இது போன்ற நடப்பு உலகில் வேறெங்காவது நடந்திருக்கலாம். நம் காலத் தமிழ் இலக்கிய உலகில் புதிது.

'தம் கவிதைத் தொகுதி மூலம் இளைஞர்களின் காதற் கனவுகளைப் பரிசுத்தப்படுத்த வரம் நல்கிய கவிஞர் மீரா' என்பார் முனைவர் பாலா. அது உண்மையே. தத்துப் பித்தென்று உளறிக் கொட்டும் கன்னிக் காதலர்க்கு மீராவின் கனவுகள் + கற்பனைகள் ஒரு நன்னூல் ஆயிற்று.

மீராவின் கனவுகள் தன்னிரக்கக் காதலுரைகள். ஆனால் அதில் அவர் கையாண்ட ஒவ்வொரு உவமையும் உருவகமும் புதியன. முற்போக்குக் கவிஞர்கள் மீது அப்போது 'ஒரே மாதிரி எழுதுகிறார்கள், மொழி பெயர்ப்புப் போல் தோன்றுகிறது, அயல்மொழி உரு, உத்தி, படிமங்கள் என்ற குற்றச்சாட்டுகள். ஒரே போடு போட்டு இந்த இழிவுகளை விரட்டி அடித்தது மீராவின் கவிதை.

அவரது கனவுகளில், காவிரியைப் போலவே வால்கா நதியும் கரைபுரண்டோடியது. அவரது கற்பனைகளில்

மக்கள் மனம் ஒன்றிய சோவியத் கூட்டுறவு அமைப்பு காதலர் மனப் பிணைப்பு ஆனது. சோவியத் பூமியின் மீது, அவர் கொண்ட நேசம் மீராவின் கனவுகளை சோவியத் கவிதையாகவும் ஆக்கிற்று. அந்த நாட்டின் எந்த மொழியில் மொழி பெயர்க்கப்பட்டிருந்தாலும் அங்கேயான வாசகர் அதில் தம் மண்ணின் மனமே முகர்ந்திருப்பர். தமிழ்க் கவிஞர் பலர் மீராவைத் தொடர்ந்து தாம் நேசித்த நாடுகளைத் தம் அன்னையாய், தோழியாய், தோழனாய், ஆசானாய்ப் பாடி தமிழ்க் கவிதையை உலகப் பார்வை உள்ளதாக்கினர். மூன்றும் ஆறும் மீராவின் கவியரங்கக் கவிதைகள். தமிழக அரசின் விருது பெற்ற தொகுப்பு.

தற்காலத் தமிழ்க் கவியரங்கின் முதல் நிகழ்ச்சி 1944-ம் ஆண்டு. திருச்சி வானொலியில் தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் ஐம்பதுகளில் சிலம்புச்செல்வர் கவியரங்கம் மக்களைச் சந்திக்கும் ஒரு வழி எனக் கொண்டார். அறுபதுகளில், திராவிட இயக்கத்தின் வெற்றிக்குச் சற்று முன்னும் தொடர்ந்தும் தமிழ்க் கவியரங்கம் இளமையும் புதுமையும் கொண்டதாயிற்று. அந்த அரங்குகளில் இளங்கவி மீரா முதலிடத்தில் இருந்தார். அடுத்த பத்தாண்டுகளில் மீரா, அப்துல் ரகுமான், தமிழன்பன், பொன்னிவளவன், முருகு சுந்தரம் ஆகியோரும் அவர்களது கவி நண்பர்களுமே ஆயிரக்கணக்கானவர் நிரம்பிய பெரும் பெரும் அரங்குகளில் கவி பாடினர். காசு கொடுத்து மக்கள் கவிதை கேட்டனர். தமிழ்க் கவியரங்கம் தமிழ்ப் பண்பாட்டு மீட்சியின் ஓரங்கம். அந்த வரலாற்றுப் பணியில் முதலில் நின்ற கவிதைச் சேவகன் மீரா.

ஊசிகள் மீராவின் குறும்பாக்கள். அதில் ஆங்கில லிமெரிக் போல அங்கதம் தொனி. ஈழத்துக் கவிஞர் மகாகவி தமிழ் லிமெரிக் முயன்று வெற்றி கண்டவர். தமிழ் நாட்டில் ஒருவரும் இல்லையா லிமெரிக் எழுத என்ற அவா தீர்த்தது ஊசிகள். இந்தச் சமூகம் வாழைப்பழம். மீராவின் கவிதைகளே ஊசிகள்.

இராசேந்திரன் கவிதைகள் மீராவின் மரபுக் கவிதைத் தொகுப்பு. மீரா இன்னும் நிறைய கவிதைகள் எழுதி இருக்க வேண்டும் என்பர். அது சாத்தியப்படாமல் போயிற்று. காரணம் அவர் நூறு வேலைகளை விரும்பிச் சுமந்ததே. என்றாலும் ஒன்று கவனத்திற்குரியது. மேலே கவிதைகள் எழுதவில்லையே தவிர மீரா கவிதை இயல குறித்து எழுதியிருப்பது நிறைய.

பல்வேறு கவிதைத் தொகுப்புகள் மற்றும் இலக்கியத் திறனாய்வு நூல்களுக்கு மீரா அளித்துள்ள முன்னுரைகள் அவரது கவிதைக் கோட்பாட்டை விளக்கும். ஒப்பீட்டுக் கவிதையியல் குறித்து விரிவாகப் பேசும். மீராவின் வாஇந்தப் பக்கம் தொடர் இளம் படைப்பாளிகள் பலரை வா, தம்பி வா என்றழைத்து இலக்கியப் பாடம் நடத்திற்று. அவரது 'எதிர்காலத் தமிழ்க் கவிதைக் இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைக்கு ஒரு கட்டியம்.

கவிதை மட்டுமே எழுதிக் குவிப்பவர்தான் கவிஞரா? கவிதைபோல உரைநடையைக் கையாள்பவர் கவிஞர் அல்லவா? அல்லது கவிதையியல் குறித்து கவிதை போலப் பேசுபவர் கவிஞர் ஆகமாட்டாரா? கவிதை வேறு, கவிதையியல் வேறு என்று வாதிப்பர் சிலர். சமாதானம் என்னவெனில் மீராவின் கவிதையியல் எழுத்துக்களையும் சேர்த்து கவிதைத் துறைக்கு அவர் அளித்த பங்கு நிறைவானதாய்த் தோன்றுகிறது என்பதே. பல ஆயிரம் செய்யுளில் காவியம் இயற்றுவோரும் ஒரு சில பத்தி உரைநடை எழுத இயலாதவர்களாயிருக்கின்றனர் என்றுதமிழ் இலக்கியச் சூழலைப் பார்த்த அந்த நாள் பாதிரி மார்கள் எழுதி வைத்தனர். இன்றும் இது உண்மையே.

பாரதி, பாரதிதாசன் இதற்கு விலக்கு. கவிதையும் உரையும் அவர்களுக்கு இருமுனைக் கத்தி. அவர்தம் கைலாவகத்தில் இதுவோ அதுவோ ஆகும் அது. மீராவும் அவ்வாறு உரைவல்ல கவி.

புதிய கவிஞர்களை அறிமுகம் செய்தது போலவே புதிய கதைஞர்களையும் அறிமுகம் செய்வித்தார் மீரா. பலரது

எழுத்துக்களில் கல்லும் மண்ணும் தூசியும் தும்பும். ஒரு தாயின் பரிவோடு அவற்றைக் கைபார்த்து, நூலாக வடித்து இலக்கிய விருந்திட்டார் அவர். அதுவும் அன்னம், அகரத்தின் பொறுப்பில்.

மீராவினால் நூலாசிரியர்களாய் அறிமுகம் ஆன புதுமுகங்கள் பலர் இன்று புகழ்முகங்கள். அந்த நட்சத்திர எழுத்தாளர்கள் இல்லாது வார இதழ்கள் வரும் நாள் விடியாது என்பது மகிழத்தக்க நிலை. மீரா புகழ்வாய்ந்த பெரும் படைப்பாளிகளின் நூல்களையும் பதிப்பித்தார். கவிஞர்களில் அப்துல் ரகுமான், அபி, சிற்பி, புவியரசு, முருகுசுந்தரம், மேத்தா என்று வளரும் பட்டியல். கதைகளில் சின்னப்பபாரதி, ராஜநாராயணன், பிரபஞ்சன், கந்தர்வன், மாலன், க.வை.பழனிசாமி, என்று தொடரும். திறனாய்வாளர்களில் பாலா, தோதாத்ரி, நுஃமான், வல்லிக்கண்ணன், வெங்கட்சாமிநாதன், இந்திரன் போன்று.

பிற பதிப்பாளர்கள் வெளியிடத் தயங்குகிற நூல்களையும் வெளியிட்டார் மீரா. மார்க்சிய உள்ளோட்டமுள்ள நூல்கள் பொது விற்பனையில் ஓடாது. தேங்கும். ஆனாலும் துணிந்து செயல்பட்டார் மீரா. கரிசல் காட்டுக் கதைகள் சிலவற்றில் நாட்டுச் சதை மணக்கும். தமிழர் அப்படி எதிர்கொள்வார்களோ என்கிற நிலையிலும் மீரா அவற்றை அச்சுப்படுத்தினார். நம் நாட்டார் இலக்கியத்தில் அரியதோர் பகுதியை அனைவரும் சுவைக்கச் செய்தார்.

மீராவின் பதிப்புலகம் விரிவானது.

கவிதைகளில் முதற்பூக்கள், சாதனை மலர்கள், சோதனையான ஒட்டு ரோஜாக்கள், கதைகளில் புதிது, பழசின் மறுபதிப்பு, மண் மணக்கும் நாட்டார் இலக்கியம் மொழி பெயர்ப்பு.

உரைநடையில் கலை, கலைத்திறனாய்வு, முன்னோட்டம் போலமைந்தவை, சிறப்பு அறிவியல் என

பலவகை நூல்களை அன்னம் அகரம் வெளியிட்டது. ஒப்புக்கு அல்லது புத்தக வியாபாரத்துக்கு என இயந்திரத் தனமாக அச்சிடப்பட்டவை அல்ல அவை. சிந்தித்து சீர்தூக்கி, ஒரு திட்டத்தோடு வெளியிடப் பட்டவை. அவ்வெளியீடுகள் தமிழரின் பழந்தமிழர் மரபு மீட்சிக்கு உதவுபவை. தமிழர் நலம் பேணுபவை. இளைஞர்களை வழிநடத்துபவை. வளரும் எழுத்தாளர்களுக்கு வழிகாட்டுபவை. அயல்மண்ணின் நல்ல கலையை, அறிவை நம் மக்களுக்குத் தேடித் தருபவை. தமிழர் உயர்வுக்குத் துணை நிற்பவை.

இப்படிப் புதிய, அரிய நூல்கள் வெளிவரக் காரணமான மீரா ஓர் அதிசயப் பதிப்பாளரே!

தன் எழுத்தும் தன் வாழ்வும் ஒன்று என்று வாழ்ந்தவர்களே மக்கள் எழுத்தாளர்கள். பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகான உலக இலக்கிய வரலாறு காட்டும் தீரச் சித்திரங்கள் இவர்தம் முகங்களே! மக்கள் வாழ்வில் சிக்கலான தருணங்களில் இத்தகையோர் பேனா வலிமை மிக்கப் பேராயுதமாக மாறும்.

மீராவின் பேனா, எழுத்து இவ்வாறு பலமுறை. ஒரு கல்லூரியின் நல்ல தமிழாசிரியர் மீரா. கல்லூரியோ முன்னாள் சமஸ்தானம் நடத்துவது.

சிவகங்கைக் கல்லூரியில் ஒரு சிக்கல். 'மன்னவனும் நீயோ, வளநாடும் உனதோ' என அரசை எதிர்த்து நின்றான் அந்தநாள் தமிழ்க்கவிஞன். அவனையொத்து கவிஞர் மீரா எழுதினார், பேசினார். ஆசிரியர்களை ஊர்மக்களை ஒன்று திரட்டினார், போராடினார். வருவாய்க்கு ஒரே வழியான ஆசிரியப் பணியைத் துறக்கவும் சித்தமாயிருந்தார். போராட்டம் தொடர்ந்தது. துரைத்தனம் செய்த சிங்கங்கள் பணிந்தன. சில ஆண்டுகளில் மன்னரின் அரச கல்லூரி மக்களின் அரசு கல்லூரி ஆயிற்று.

மீரா மதுரைக் காமராசர் பல்கலைக் கழகப் பேராசிரியர். அங்கே, ஆசிரியர்நலன், தமிழ்நாட்டுக்கல்வி முன்னேற்றம்

என்பவை ஒரு களம் இரு முனைகள் என்று அவரது போராட்டம். நாளடைவில் மதுரை எல்லை மாநிலம் என்று விரிந்தது. பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பிற்காக இதமொன்றும் நடத்தினார் மீரா. இடம் வலம் எனப் பேதமுறாது, போராட்டக் களங்களில் தானாகப் பங்கேற்று முன் நிற்பவர் மீரா.

பொது நலனுக்காக எழுதுதலும் அதற்கான ஜனநாயக ரீதியானப் போராட்டங்களும், மீராவின் மாணவப் பருவத்திலேயே அவர் மனத்தில் படிந்தவையாம். அந்த நாளில் திராவிட இயக்கம் சார்ந்த ஒவ்வொரு தமிழர் நலச் செயல்பாட்டிலும் அவர் கலந்திருந்தார். பின்னர் பொது உடைமை இயக்கங்களின் மக்கள் உரிமைப் போராட்டங்களிலும் முன் நின்றார். ஒன்றல்ல, இப்படி ஒரு நூறு பட்டியலிடலாம். மீரா ஓர் ஊமை அறிவு ஜீவி அல்ல. உரிமைக்காக உரத்த குரல் கொடுக்கும் அறிவுப் போராளி.

மீ.இராசேந்திரன் (1938) எனும் மீரா கவிஞராய் ஆளானது மொழிப்போர் நடந்தபோது. மீரா அன்னம்/ அகரம் பதிப்பகங்கள் தொடக்கியது அவசர நிலைக்கு அண்மைக்காலத்தில். இத்தகைய பதிவுகள் மீராவைத் தமிழ் மொழியோடும் தமிழர் வரலாற்றோடும் இணைத்து நிறுத்தி கவுரவப்படுத்தும்.

அந்நியர், புதியவர், தோழர், இளைஞர், மூத்தோர் வேற்று அணி தத்துவம் சார்ந்தவர் எனப் பலரது படைப்புகளையும் எழுத்தெழுத்தாய் படித்து அவை உயிரென்றால் அவற்றுக்கு உடல் உருக்கொடுத்து தமிழ் கூறும் உலகெங்கும் உலவ விட்டவர் மீரா. மீராவின் கவிதை, கட்டுரை, மற்றும் எழுத்துக்கள் அடங்கிய ஒட்டு மொத்தத் தொகுதி ஒரு கனவு. எங்கள் மீராவைப் போல் இன்னொரு மீரா கிடைப்பாரா அதற்கு?

நன்றி: 'தாமரை'
ஏப்ரல் '2002'

# 'சிறப்'புரை

என் கோவை வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சி என் மணிவிழா. என் அறுபதாம் வயது பிறக்கும் நாள் அன்று தான் என்று எனக்கே தெரியாமல் நடந்த விழா.

அது எந்த மண்டபத்திலும் நடக்கவில்லை. உற்றார், உறவினர், என் நேயர்கள் என்று யாரும் வரவில்லை. எளிமையாய் அதே நேரத்தில் அதிசயமாய் ஒரு வீட்டில் நடந்தது.

கோவைப் புதூரில் உள்ள வீடு அது. விஜயா பதிப்பக உரிமையாளர் அருமைச் சகோதரர் திரு.மு.வேலாயுதம், அதிகாலையில் இராமநாதபுரத்தில் என் வீட்டுக்குக் காரை அனுப்பி என்னையும் என் மனைவியையும் கூட்டி வரச் சொன்னார். குளித்து முடித்துப் போனோம்.

பட்டு வேட்டி, பட்டுச் சேலை, சட்டைகளைக் கையில் எடுத்து வந்து 'இவற்றை அணிந்து கொள்ளுங்கள்' என்றார். என்ன விஷயம்; என்றேன். இன்று உங்கள் மணிவிழாப் பிறந்த நாள் என்றார். நான் மலைத்துப் போனேன். மனம் நெகிழ்ந்து போய்விட்டேன்.

புத்தாடைகளை அணிந்து கொண்டோம். மாலையை எடுத்து வந்து அவரும் ஆச்சியும் சூட்டினார்கள். பொன்னாடை போர்த்தினார்கள். கண் குளிரப் பார்த்தார்கள். மனங் குளிரப் போற்றினார்கள். வயிறு குளிர விருந்துண்ண வைத்தார்கள்.

கொஞ்ச நேரத்தில் 'காரில் ஏறுங்கள்' என்றார். எங்கே என்றேன். நாங்கள் நால்வரும் காரில் ஏறியதும் 'ஒட்டுநரைப் பேரூர் போ' என்றார். பேரூரில் இறங்கி அவர் பின்னால் நடந்தோம். நேரே கோயிலுக்குப் போனார். நாங்கள் பின்னால் போனோம். 'ஒன்றும் பேசாமல் உள்ளே வாருங்கள்' என்றார். சந்நிதிக்குப் போய்

சிறப்புப் பூசை செய்யச் சொன்னார். பழக்கமில்லாத என்னைச் சாமி கும்பிடச் சொன்னார். அவர் பேரன்புக்குக் கட்டுப்பட்டுப் நான் வழிபட்டேன்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு 'மூன்றும் ஆறும்' வெளிவந்தபோது, அதைப் படித்துவிட்டு (அப்போது அவர் சிதம்பரம் மளிகை மு.வேலாயுதம்) பரவசப்பட்டு மூன்று பக்கங்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அன்றிலிருந்து திரு.மு.வே. வசப்பட்டேன்.

நேயராக இருந்து பிறகு என் நெருங்கிய சகோதரரான திரு.மு.வே. அவர்கள் எனக்கு எடுத்த மணிவிழா புத்தக உலகமே கொண்டாடிய மணிவிழாப் போலிருந்தது. சில தினங்களுக்கு முன் அறிவியல் மேதை அப்துல் கலாம் பெயர் குடியரசுத் தலைவர் பதவிக்கு அறிவிக்கப் பட்டதைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்ததைப் போன்ற உணர்வைப் பெற்றேன்.

மணிவிழா முடித்து வீட்டுக்கு வந்தோம். என் வீட்டு வாசலில் கவிஞர் சிதம்பரநாதனுடன், ஓம் சக்தித் தோழர்கள் ஆளுயர மாலைகளுடனும் சால்வைகளுடனும் நின்று கொண்டிருந்தார்கள்.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததும் கவிஞர் மாலைகளை அணிவித்து, சால்வைகளைப் போர்த்தி கௌரவித்தார். மறுநாள் அவர் வீட்டுக்கு அழைத்துச் சென்று நல்ல விருந்தளித்தார்.

என்னைச் சிறப்பித்த திரு.மு.வே.அவருடைய துணைவியார் பெரிய நாயகி ஆச்சி மற்றும் குடும்பத்தினர் கவிஞர் சிதம்பரநாதன் - அவருடைய துணைவியார் டாக்டர் சரோஜினி தேவி மற்றும் குடும்பத்தினர், வாழையடி வாழையென வரும் அவர்கள் பரம்பரையினர் எல்லாரும் எல்லாச் செல்வங்களுடனும் புகழ் ஒளியுடனும் வாழ வாழ்த்துகிறேன்.

மீரா



ஒரு பனிக்கால மௌனத்திற்குப் பிறகு
மீரா மீண்டும் குயிலாகிக் 'கூக்கூ' என்று
கூவியிருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது.

மீராவின் கவிதைகளைத்
தமிழ்நாட்டுக் காலவுணர்வைக் காட்டும் மானிகள்
என்றே கூறலாம்.

'கூக்கூ'வின் தனித்தன்மை
ஹைகூவைத் தமிழ்ப்படுத்தியிருப்பது.

'கனவுகள்' போலவே
இதுவும் ஒரு மரபைத்
தொடங்கி வைக்கலாம்.

- *அப்துல் ரகுமான்*

அகரம்

ரூ